## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 17/2016 | Date : 17.02.2023 | PW1 |
|---|---|---|
| Name: மாதையன் | த/பெ. சடையன் | |
| Evidence Recorded Time: 12.01 P.M. to 12.30 P.M. | | |

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்து 22.12.2006–ம் தேதியில் இரவு 7.15 மணிக்கு நடைபெற்றது என்றால் சரிதான். விபத்து நடைபெற்று மூன்று நாட்கள் தாமதமாகத்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 2006–ம் ஆண்டு விபத்து ஏற்பட்டு 2014–ம் ஆண்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது காலதாமதத்திற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையில் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றபோதுதான் விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக மாதிரி வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த மனுவின் முதல் பக்கத்தில் நியூ இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பாலிசி எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மனுவின் மூன்றாவது பக்கத்தில் பாலிசி எண் குறிப்பிட்டுள்ளேன், அந்த பாலிசி எந்த தேதியில் இருந்து எந்த தேதியில் முடிவடைகிறது என்பதற்கோ, அல்லது என்ன இன்சூரன்ஸ் கம்பெனியில் அந்த பாலிசி பெறப்பட்டது என்றதற்கோ எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மனுவிலோ, பிரமாண பத்திரத்திலோ மேற்படி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் எந்த கிளையில் பாலிசி பெறப்பட்டது என்பதை காட்டுவதற்காக பாலிசி நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.9 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் கலம் 11–ல் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பெயர் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மற்ற விவரங்கள் குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். 2006–ம் ஆண்டு நடைபெற்ற விபத்து என்பதால் இன்சூரன்ஸ் பாலிசியின் நகல் தாக்கல் செய்ததால் தான் இழப்பீடு வழங்க முடியும் என்றாலும் பாலிசி நகல் தாக்கல் செய்யததால் 2–ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல என்றாலும், 1–ம் எதிர்மனுதாரர் 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பாலிசி எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. பாலிசி விவரங்கள் மற்றும் பாலிசி நகல் சமர்ப்பிக்கவில்லை என்பதால் நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றால் 1–ம் எதிர்மனுதாரர்தான் நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றாலும் 2–ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. விபத்திற்கு பிறகு நான் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு விபத்து பதிவேடு, காயச் சான்றிதழ், விடுவிப்பு சான்றிதழ் மற்றும் நுண்கதிர்படங்கள்

ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் இல்லை சேலம் விநாயகா மிஷன் மருத்துவனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என்னுடைய சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக என்னுடைய பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு விபத்து பதிவேடு, காயச் சான்றிதழ், விடுவிப்பு சான்றிதழ் மற்றும் நுண்கதிர்படங்கள் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.2 சேலம் விநாயகா மிஷன் மருத்துவனை வழங்கிய காயச் சான்றிதழில் நான் இரு சக்கர வாகனத்தை ஓட்டிச் செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 சேலம் விநாயகா மிஷன் மருத்துவனை வழங்கிய விடுவிப்பு சான்றிதழில் நான் நடந்து செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.2, ம.சா.ஆ..3 ஆவணங்களில் 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன பதிவெண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்தில் ஈடுபடவில்லை என்றாலும் விபத்து நடைபெற்று 8 ஆண்டுகள் கழித்து நஷ்டஈடு பெறவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. கமலா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு இரண்டு ஆவணங்களின் நகல்களை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மேற்படி இரண்டு ஆவணங்களும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. 01.05.2007-ற்கு பின்னிட்டு கடந்த 16 வருடங்களாக தொடர்சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்றாலும் அவை அனைத்தும ஆறிவிட்டது என்றாலும் விபத்தினால் எனக்கு எந்தவிதமான வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள பிரிவு 337 என்பது சாதாரண காயங்களுக்கான பிரிவு என்றால் சரியல்ல. நஷ்டஈடு அதிகமாக பெறவேண்டும் என்ற எண்ணத்தில் எனக்கு ஏற்பட்ட பாதிப்புகளை மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ், தகுதி சான்றிதழ், பர்மிட் ஆகியவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிச் சென்ற 3-ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இருந்தற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட இரசக்கர வாகனத்தின் பதிவு சான்றிதழ், ஓட்டுநர் உரிமம், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை

என்பதால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இழப்பீடு அதிகமாக பெறுவதற்காக நான் காண்ட்ராக்ட் தொழில் மூலம் மாதம் ரூ.30000/– சம்பாதித்து வந்ததாக மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வயது, தொழில், வருமானம் ஆகியவற்றிற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேலம் விநாயகா மிஷன் மருத்துவனை மற்றும் கமலா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான நுண்கதிர் படங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 3–ம் எதிர்மனுதாரருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் மற்றும் பொதுவில்லை இல்லை என்பதால் 2–ம் எதிர்மனுதாரர் எந்த விதமான நஷ்டஈடும் தரவேண்டியது இல்லை என்றாலும் 1–ம் மனுதாரர் தான் இழப்பீடு தர கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய ஆஜாக்கரதைதான் காரணம் என்றாலும் 3–ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.8 மருத்துவ பில்களில் பில் எண்.1, 10, 11 ஆகிய பில்கள் அட்வான்ஸ் பில்கள் என்பதால் மேற்படி பில்களுக்கான தொகை நஷ்டஈடாக வழங்க முடியாது என்றால் சரியல்ல. பில் எண்.2 முதல் 9, 46, 48 முதல் 52 பில்களில் என் பெயர் கைகளால் எழுதப்பட்டுள்ளதால் அந்த பில்களுக்கான தொகை எனக்கு நஷ்டஈடாக கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.8 மருத்துவ பில்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள நஷ்டஈடு அதிகம் என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யான வழக்கு என்பதால் 2–ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.